**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 775/2023**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | காளி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆயிரப்பேரி | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 18th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆயிரப்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சாமி எனது அண்ணன். 15.01.2023 அன்று எதிரிகளின் வீட்டின் முன்பு, எதிரிகள் வெட்டியதினால் என்னுடைய அண்ணன் காயம் ஏற்பட்டு கிடந்தார். நான் வெட்டியதை நேரில் பார்க்கவில்லை. நான் தகவல் தெரிந்து சம்பவயிடத்திற்கு செல்லும் போது, என்னுடைய அண்ணனுக்கு தோள்பட்டையில் காயம் இருந்தது. வேறு இடங்களில் காயங்கள் இருந்ததா? என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. நான் பின்னர், தென்காசி அரசு மருத்துவமனைக்கு என் அண்ணனை அழைத்து வந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.18 18:58:03 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 775/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லிங்கத்துரை | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | ஆயிரப்பேரி | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August $18^{th}$, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆயிரப்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சாமியை எனக்கு தெரியும். 15.01.2023 அன்று சாயங்காலம் 06.15 மணியளவில் எதிரி ராமையா வீட்டின் முன்பு வைத்து மகேஷ் வேகமாக பைக்கில் சென்றதினால், ராமையா "ஏன் எங்கள் வீட்டின் முன்பு வேகமாக செல்கிறாய்" என்று கேட்டார். பின்னர், இரவு 08.15 மணியளவில் ராமையா வீட்டின் முன்பு வைத்து மாரிச்செல்வத்தையும், சாமியையும் எதிரிகள் தாக்கினார்கள். சாமியை எதிரி ராமைய்யா அரிவாள் வைத்து தோள்பட்டையில் வெட்டினார். ராமைய்யா கம்பியால் சாமியின் கையில் அடித்தார். மாரிச்செல்வத்தை எதிரி தினேஷ் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் அரிவாள் வைத்து இடது கையிலும், தலையிலும், மோதிர விரல்களிலும் வெட்டினார். நான் காயம்பட்ட சாமி மற்றும் மாரிச்செல்வம் ஆகியோர்களை

தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து விட்டு, பின்னர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.18 18:58:14 +0530